வரலாறு


பரீட்சை வழிகாட்டி - வினாத் தொகுப்பு

விடுமுறை கால
செயற்றிட்டம்

தரம் -11
மாணவர்களுக்குரியது







திரு. AGM. ஹக்கீம் (SLEAS)

A.D,E – History - Batticaloa
Central Zone

10 அலகு : 01

1 வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்

01. வரலாற்று மூலாதாரங்களினதும் இரு வகைகளையும் தருக?

02. இலக்கிய மூலாதாரங்களின் இரு வகைகளும் எவை?

03. இலங்கையின் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களில் 4 தருக?

04. (i) இலங்கையின் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களுள் மிகப் பழமையான நூல் எது?
(ii) தீபவம்சம் எத்தனையாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது?

05. (i) மகா வம்சத்தை எழுதிய மகாநாம தேரர் வாழ்ந்த பிரிவெனா எது?
(ii) மகா வம்சத்தில் எக்காலப்பகுதி வரலாற்றை அறியலாம்?

06. (i) மகா வம்ச டீகாவ எனப்படும் உரை நூலுக்கு எவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது?
(ii) இலங்கையில் புத்தசாசன எழுச்சி பற்றி எழுதப்பட்டுள்ள நூல் ஒன்று தருக?

07. இராசரட்டை கால வரலாற்றை அறிய உதவும் நூல்கள் 4 தருக.

08. கம்பளை முதல் கோட்டை வரையிலான காலப்பகுதியின் வரலாற்றை அறிய உதவும் நூல்கள் எவை?

09. கோட்டை இராசதானி முதல் கண்டி இராசதானி வரையிலான காலப்பகுதி வரலாற்றை அறிந்து கொள்வதற்கு உதவும் நூல்கள் எவை?

10. இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் 4 தருக?

11. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவம் பெற்று எழுதியுள்ள எழுத்தாளர்கள் நால்வரைக் குறிப்பிடுக?

12. இலங்கை பற்றி எழுதப்பட்டுள்ள தென்னிந்திய வரலாற்று நூல்கள் 3 தருக?

13. இலங்கைக்கு வருகை தராது இலங்கைக்கு வருகை தந்தவர்களிடம் கேட்டறிந்து இலங்கை பற்றி எழுதிய எழுத்தாளர்களுள் நால்வரையும் அவர்களது நூல்களையும் குறிப்பிடுக?

14. எமது நாட்டில் கண்டெடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் 3 தருக.

15. (i) பனாகடுவ செப்பேட்டை எழுதிய மன்னன் யார்?

(i) இதில் கூறப்பட்டுள்ள விடயம் யாது?

16. பின்வரும் கல்வெட்டுக்களை எழுதிய மன்னர்களைத் தருக?

17. (i) எமது நாட்டடில் கிடைக்கப்பெற்ற மிகப் புராதன நாணயம் எப் பெயரால் அழைக்கப்படுகின்றது?

(ii) பொலனறுவைக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட செப்பு நாணயம் எது?

18. (i) புராதன நாணயங்கள் பற்றி ஆய்வு செய்யப்படும் பாடம் எவ்வாறு அழைக்கப்படும்?

(ii) இலங்கையின் கலாசார வளர்ச்சியின் உயிரோட்டமான சாட்சியங்களாக விளங்கும் அம்சங்கள் 2 தருக?

19. புராதன நாணய மூலாதாரங்களின் முக்கியத்துவங்கள் 3 தருக?

20. தொல்பொருட்கள் அழிந்து போவதற்கான காரணங்கள் 4 தருக?

21. தொல்பொருள் மூலாதாரங்களை பாதுகாப்பதற்கு நீர் கூறும் வழிமுறைகள் 3 தருக?

22. யாழப்பாண வரலாற்றை அறிய உதவும் நூல்கள் 4 தருக?

23. பின்வரும் விடயங்களை குறிப்பிடும் கல்வெட்டுக்களைத் தருக?

24. பின்வரும் செப்பேடுகளை பொறித்த மன்னர்களைத் தருக?

25. பிற நாட்டு வரலாற்று அறிஞர்கள் இலங்கைக்கு வழங்கிய பெயர்கள் 4 தருக?

10 அலகு : 02

2 இலங்கையின் குடியேற்றங்கள்

1. இலங்கையின் மானிட வாழ்க்கை வரலாறு வகுக்கப்பட்டுள்ள கால கட்டங்கள் எத்தனை? அவை எவை?

2. தாழ்நில ஈரவலயத்தில் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்ப்பட்ட கால மக்கள் அதிகம் விரும்பியுண்ட உணவு யாது?

3. இலங்கையில் முதலில் குடியேறிய ஆதி மனித இனம் எது?

4. பிளைத்தோசின் எனப்படும் பெரும்பனிக்காலத்தில் இலங்கையில் முனைப்பாக காணப்பட்ட காலநிலைப்பண்பு யாது?

5. இலங்கையில் கற்காலத்துக்குரிய கல்லாயுதங்கள் பெரிதும் கிடைக்கப்பெற்ற சரளைக்கற்படிவிற்கு வழங்கும் சிறப்பு பெயர் யாது?

6. பாகியன்கல எனும் கற்க்குகை அமைந்துள்ள இடம் எது?

7. இலங்கையின் வரலாற்றுக்கு முற்ப்பட்ட வெட்ட வெளிகளில் தாழ்நில ஈர வலய குகைகள் அமைந்துள்ள இடங்கள் 3 தருக

8. மரணச்சடங்கு முறைகள் வரலாற்றுக்கு முற்ப்பட்ட காலத்தில் இடம்பெற்றமைக்கான சான்றுகள் கிடைத்துள்ள குகைகள் 2 தருக

9. கித்துள்கல பெலிலென குகையில் தீயில் சுட்டு சாப்பிட்மைக்கான சான்று கிடைக்கப்பெற்றுள்ள உணவுப்பொருள் யாது?

10. இலங்கையின் கற்கால தொழினுட்பம் பற்றி விபரமான அறிவைபெற உதவும் பிரதானமான சான்று யாது?

11. இலங்கையில் கற்காலத்தில் வாழ்ந்த மனிதர்களுடன் இன்று ஒப்பிடக்கூடிய வகையில் கலாச்சார ரீதியாகவும் உயிரியல் ரீதியாகவும் சமமான தன்மைகள் பல காணப்படுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டும் குடிகள் யார்?

12. ஆரம்ப இரும்பு யுகம் என்று அழைக்கப்படும் வரலாற்றுக்காலகட்டம் எது?

13. கல்லறை மயானங்களில் (Cist Burials) பாதுகாத்து வைக்கப்பட்ட பொருள் யாது?

14. நிலையான வீடுகளை அமைத்து குடியிருப்புக்களை நிறுவியமைக்கான சான்று கிடைக்கப்பெற்றுள்ள இடம் யாது?

15. முன்வரலாற்றுக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் தங்களை அலங்கரித்துக்கொள்வதில் அதிக அக்கறை காட்டியுள்ளனர் என்பதற்க்கான சான்றுகள் 2 தருக

16. திஸ்ஸமகராம குளத்தை அமைத்த மன்னன் யார்?

17. "அவரண" என்ற சொல் குறிக்கும் குளத்தின் கூறு யாது?

18. ஒரு குளத்தை அடிப்படையாக கொண்டு வளாச்சியடைந்த குடியேற்றம் இலக்கிய மூலாதாரங்களில் எப்பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது?

19. தாவர உணவுகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்டி, உலோகப் பயன்பாட்டுடன் நிரந்தரக் குடியேற்றங்களை நிறுவிய காலம் யாது?

20. வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமங்கள் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

21. முதலாம் விஜயபாகு மன்னனின் பனாகடுவ செப்பு சாசனத்தில் அனுராதபுரத்தை குறிக்கும் சொல் யாது?

22. பிராமிக் கல்வெட்டுக்களில் குர்ஹபதி என குறிப்பிடப்படுபவன் யார்?

23. மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள பண்டைய பௌத்த விகாரை யாது?

24. நீண்டகாலம் நிலைத்திருந்த கற்காலம் எப்பெயரால் அழைக்கப்படும்?

25. இரணைமடுப் படிவு எந்த யுகத்தின் சிறு உஷ்ணகாலத்தில் நிலத்தினுள் புதைந்து காணப்பட்டது?

26. பதிராஜவெல எனும் பிரதேசம் எந்த மாகாணத்தில் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது.?

27. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனால் உணவாகக் கொள்ளப்பட்ட நன்னீர் மீனினம் ஒன்று தருக

28. வளைத்து புதைக்கப்பட்ட எலும்புக்கூடு எந்தக் குகையில் கண்டெடுக்கப்பட்டது?

29. களிமண் பாத்திரங்களில் பாதுகாக்கப்பட்ட அஸ்தி குழிதோண்டிப் புதைக்கப்பட்ட மயானங்கள் எப்பெயரால் குறிப்பிடப்பட்டன?

30. உடரஞ்சா மடம் குடியிருப்பில் கண்டெடுக்கப்பட்ட நிறந்தீட்டப்பட்ட மட்பாண்டத் துண்டுகள் எப்பெயரால் அழைக்கப்பட்டன?

31. மக்களால் கைவிடப்பட்ட கிராமம் எவ்வாறு அழைக்கப்பட்டது.?

32. கிராமத் தலைவர்கள் பத்துப் பேரைக் கொண்ட சபை, கல்வெட்டுக்களில் எப்பெயரால் குறிப்பிடப்படுகிறது.?

33. களிமண் ஓட மயானங்கள் அதிகளவில் கிடைக்கப்பெற்ற மாகாணங்கள் 2 தருக.

34. இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த பிரதான சுற்றாடல் வலயம் யாது?

35. பின்வரும் இடங்களில் உள்ள கல்லறை மயானங்களின் பெயர்களை எழுதுக?

36. பண்டைய குடியிருப்புகளின் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய புவியியல் காரணிகள் 3 தருக?

37. மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் குளக் கிராமங்கள் 4 தருக?

38. கரையோர வெட்ட வெளிகள் 2னைப் பெயரிடுக.

39. பின்வரும் இடங்கள் அமைந்துள்ள மாவட்டங்களைப் பெயரிடுக

பாகியன்கல	முருங்கன்
களுதிய	

10 அலகு : 03

3 இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி

1.பின்வருவோர் பண்டைய காலத்தில் எப்பெயர்களால் அழைக்கப்பட்டனர்?

1.குடும்பத்தலைவன்- 2.கிராமத்தலைவன்- 3.குளத்தொகுதிக்குரிய தலைவன்

2.பண்டைய காலத்தில் மக்கள் தமது கிராமங்களை வேறுபடுத்திய விதங்கள் மூன்றும் எவை?

3.இல்லத் தலைவனால் நிறைவேற்றப்பட்ட பணிகள் யாவை?

4.சித்துல்பவ்வ கல்வெட்டில் பிக்குகளுக்கு குகையை சுத்தமாக்கி தானமளித்ததாக குறிப்பிடப்படும் மூன்று நபர்களையும் குறிப்பிடுக?

5.பண்டுகாபய மன்னன் தனது ஆட்சியில் மேற்கொண்ட முக்கிய பணிகள் மூன்று தருக?

6.தேவநம்பிய தீசன் காலத்தில் இலங்கை சர்வதேச வர்த்தகத்தில் சிறந்து விளங்கக் காரணம் யாது?

7.இலங்கையில் மத்திய ரெசொன்றை உருவாக்க தேவநம்பிய தீசன் மேற்கொண்ட செயற்பாடுகள் மூன்று தருக?

8.துட்டகைமுனு மன்னன் காலத்தில் பருமகர்களாக செயற்பட்டவர்கள் நாள்வரைக் குறிப்பிடுக?

9.பண்டைய அரசர்களால் மக்களுக்கு வழங்கப்பட்ட பிரதான பணிகள் மூன்று தருக?

10.பண்டைய அரசர்கள் மக்கள் மத்தியில் தோற்றம் தர விரும்பிய விதங்கள் யாவை?

11.பின்வரும் மன்னர்கள் தம்மை மக்கள் மத்தியில் எவ்வாறு அறிமுகப்படுத்தினர்?

12.பண்டைய காலத்தில் அரசுரிமை கைமாறப்பட்ட விதங்களைத் தருக?

13.பின்வரும் பதவிகள் பண்டைய காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

14.பின்வரும் பதவிகளுக்குரிய பெயர்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்க.

பொருளாளர்- உணவுச்சாலை அதிகாரி-
வழக்காறுகள் மரபு முறைகள் தொடர்பான அதிகாரி- நகர பரிபாலகர்-
(பதகு நகர குத்திக கொதுறு கேனா படகரிக)

15.பின் வரும் படைப்பிரிவுகளுக்குரிய பெயர்களைக் குறிப்பிடுக.

குதிரைப்பிரிவின் தலைவர் யானைப் பிரிவின் தலைவர்
நாட்டிய பிரிவின் தலைவர்- காசு அச்சிடும் பிரிவின் தலைவர்-

16.பின் வரும் பதவிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்களைக் குறிப்பிடுக.

வர்த்தக நடவடிக்கைக்கான தலைவர் நகர கட்டட நிர்மானி அரச செயலகத் தலைவர்

17.துட்டகைமுனு மன்னனின் செயற்பாடுகள் மூன்று தருக.

18.வசப மன்னனின் சிறப்புக்கள் நான்கு தருக.

19.முதலாம் விஜயபாகு மன்னனின் சிறப்புகள் மூன்று தருக.

10 அலகு : 04

4 பண்டைய சமூகம்

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

01.எந்தவொரு நாட்டிலும் நிர்வாகத்தை கொண்டு நடாத்தும் மூன்று தாபனங்களும் யாவை?

02.அநுராதபுரம் தலைநகராக விளங்கிய காலத்தில் உள்ளூராட்சி தொடர்பான நிர்வாக அமைப்புக்கள்

ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணிகள் 2 தருக

03.தேவநம்பியதிஸ்ஸ மன்னனுக்கு பின்னர் அரசுரிமை பெற்ற அவரது சகோதரர்கள் நால்வரும் யாவர்?

04.நாட்டு மக்களின் நலன்களுக்காக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் 2 எழுதுக?

05.புராதன காலத்தில் பொதுச்சுகாதார வசதிகளை வழங்குவதில் கவனம் செலுத்திய மன்னர்கள் நால்வரின் பெயர்களை எழுதுக?

06.எமது நாட்டை ஆண்ட மன்னர்கள்அயல் நாடுகளுடன் ஏற்படுத்திய தொடர்பின் வகைகள் 4 தருக?

07.இலங்கை தமது அயல் நாடான இந்தியாவுடன் மேற்கொண்ட திருமண தொடர்பிற்கு 2 உதாரணங்கள் எழுதுக?

08.புராதன காலத்தில் இந்நாட்டில் நிலவிய நிர்வாகத்தின் தலையாய நோக்கங்கள் 3ம் யாவை?

09.சேனைப்பயிர்ச்செய்கைக்காக அரசர்களினால் அறவிடப்பட்ட இரு வரிகளும் யாவை?

10.சேனைப்பயிர்ச்செய்கை நிலங்களின் இரு வகைகளும் எவை?

11.சேனையை வனவிலங்குகளிடம் இருந்து பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் 2 எழுதுக?

12.புராதன காலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட மூன்று போகங்களும் எவை?

13.பின்வரும் கைத்தொழில்களை மேற்கொண்டவர்களை புராதன பதிவேடுகளில் அழைக்கப்பட்ட விதங்களை குறிப்பிடுக?

1.இரும்புத்தொழிலை மேற்கொண்டவர்கள்

2.தங்கத்தொழிலில் ஈடுபட்டவர்கள்

3.இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள்

4.மட்பாண்டம் வனைதல் தொழிலில் ஈடுபட்டவர்கள்

14.சொரபொரவாவி தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஹோபிட்டிகம சந்தை நிர்வாகம் பற்றி பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள் 3 தருக?

15.கி.பி.11-13நூற்றாண்டு வரை இந்நாட்டில் செயற்பட்டதென்னிந்திய வம்சாவளிகளின் வர்த்தக நிறுவனங்கள் 3 தருக?

16.புராதன காலத்தில் இலங்கை சர்வதேச வர்த்தகத்தில் குறிப்பிடப்பட்ட பங்காற்றியமையில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் 2 எழுதுக?

17.வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கியம் பெற்ற பண்டைய துறைமுகங்கள் 4 எழுதுக?

…18.புராதன காலத்தில் பின்வரும் கலைகளில் பாண்டித்தியம் பெற்றவர்கள் கல்வெட்டுக்களில் அழைக்கப்பட்ட விதத்தை எழுதுக?

1.யானையை பழக்கும் ஆசிரியர்

2.குதிரை சவாரி பழக்கும் ஆசிரியர்

3.அம்பு எய்தும் கலையை கற்பித்தோர்

19.பண்டைய காலத்தில் இனங்களுக்கிடையே நல்லுறவு நிலவியமைக்கான சான்றுகள் 2 எழுதுக?

20.இந்து சமயகருத்துக்கள் இந்நாட்டில் பரவியமைக்கான காரணிகள் 2 எழுதுக?

10 அலகு : 05

5 இலங்கையின்புராதனவிஞ்ஞானமும்தொழினுட்பமும்

1) நீர் முகாமைத்துவம் என்றால் என்ன?

2) ஒரு குளத்தின் முக்கியக் கூறுகளைக் குறிப்பிடுக?

3) பின்வரும் குளக் கூறுகளின் தொழிற்பாட்டைக் குறிப்பிடுக

1.அலைதாங்கி 2.கலிங்கற்கட்டு 3. கலிங்கல் தொட்டி 4.வான்கதவு

4) எலகரக் கால்வாய் மூலம் நீர் வழங்கப்பட்ட குளங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

5) புராதன காலத்தில் தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்ட மூன்று துறைகளைத் தருக?

6) ருவன்வெலிசாய தாது கோபம் அமைக்கப்பட்ட போது பின்பற்றப்பட்ட உத்திகள் மூன்றினைத் தருக?

7) "பால்மடுயாகம்" என்பது யாது?

8) பண்டைய இலங்கையில் பின்வருவனவற்றை அளவீடு செய்ய பயன்படுத்திய முறைகளைத் தருக.

1. நிலத்தை அளவீடு செய்வதற்கு
2. நீண்ட தூரத்தை அளப்பதற்கு
3. நிறையை அளப்பதற்கு
4. சிறிய தூரத்தை அளப்பதற்கு

9) பண்டைய இலங்கையில் காலத்தை எவ்வாறு அளவீடு செய்தனர் ?

10) மகாவாவிகள் உருவாக்கப்பட்டமைக்கான காரணங்கள் மூன்றினைத் தருக?

11) பிக்குகளின் பயன்பாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்ட தடாகங்கள் மூன்றினைத் தருக?

12) சீகிரியாவின் நகர நிர்மாணத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள தொழிநுட்ப முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

13) சீகிரியாவின் நீர்ப்பூங்கா அமைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள தொழிநுட்ப அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

14) இலங்கையில் பண்டைய காலந்தொட்டே இரும்பை பிரித்தெடுக்கும் தொழிநுட்பம் காணப்பட்டமைக்கான உதாரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

15) புராதன இலங்கையில் குளக்கட்டை அமைக்கப் பயன்பட்ட மண் வகைகள் எவை?

16) அனுராதபுரக் காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் எவை?

17) புராதன இலங்கையில் சுகாதார சேவையும் வைத்திய முறையும் சிறப்புற்றிருந்தமையை பறைசாற்றும் விடயங்களைக் குறிப்பிடுக?

10 அலகு : 06

6 வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரயோகமும்

1. பண்டைய சமூக அமைப்பினுள் நிலைக்குத்தான கட்டமைப்பு, கடையான கட்டமைப்பு என்பவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக?

2)பண்டைய சமூக அமைப்பினுல் சாதாரண மக்கள் எனும் வகைக்குள் அடங்கும் மக்கள் பிரிவினரைத் தருக?

3)பண்டைய காலத்தில் வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட வரிகள் யாவை?

4) இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டமியற்றிய மன்னர்கள் மூவவரின் பெயரை எழுதுக?

5) வர்த்தகம் தொடர்பாக சொரபொரவெவத் தூண் கல் வெட்டில் விபரிக்கப்பட்ட சட்டங்கள் 3 தருக?

6) 4ம் மகிந்த மன்னனால் நிறுவப்பட்ட வேவல்கட்டிய கல்வெட்டில் குற்றங்களுக்காக குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைகள் யாவை?

7) உயிரினங்களைப் பாதுகாக்கும் பொரட்டு சட்டம் இயற்றிய மன்னர்கள் மூவரைத்தருக?

8) இலங்கையில் பாவனையில் இருந்த வெளிநாடடு நாணயங்களைத் தருக?

9) பண்டைய கால பெண்கள் ஆட்சி நடவடிக்கைகளில் தலைமைத்துவம் வழங்கியுள்ளனர் என்பதற்கு

10) பண்டைய கால பெண்கள் தம் அழகில் அக்கறை கொண்டிருந்தனர்.உள்பதற்கான ஆதாரங்கள் 2 தருக?

11)பின்வரும் சட்டங்களை நடை முறைப்படுத்திய மன்னர்களைத் தருக.

A- குளங்களிலிரந்து நீர் பெறப்படும் வயல்களில் நெல் தவிர பாசிப்பயறு விதைத்தல் ஆகாது.

B- நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொலை செத்தல் கூடாது.

C- அரச அதிகாரிகளால் அளவு குறிக்கப்படாத தராசுகள் கொண்டு வியாபாரம் செய்தல் கூடாது.

D- மிருகங்களை எவரும் கொல்லக்கூடாதுஎன முதலில் சட்டம் இயற்றிய மன்னன்

12) புராதன காலத்தில் நாட்டில் காணப்பட்ட சமூகப்பிரிவுகள் மூன்றைத் தந்து அவற்றுக்கு உதாரணம் தருக.

13) சூழல் பாதுகாப்பின் பொருட்டு பண்டைய அட்சியாளர்கள் மேற் கொண்ட நடவடிக்கைகள் 2 தருக.

14) புராதன இலங்கை மக்களின் உணவுகளில் பல்வகைத் தன்மை காணப்பட்டமையை அவர்களது உணவுகளின் அடிப்படையில் குறிப்பிடுக.

15) ஆரோக்கியமான வாழ்க்கைக்கு பண்டைய கால மக்களின் உணவு றையிலிருந்து நாம் பெறக் கூடிய முன்மாதிரிகள் மூன்று தருக.

16) இலங்கையில் பயன்பாட்டிலிருந்த நாணயங்கள் 3 தருக.

17) புராதன காலத்தில் பெண்கள் சுதந்திரமாக செயற்பட்டனர் என்பதற்கு 3 ஆதாரங்கள் தருக.

18) பண்டைய கால மக்கள் உணவின் சுவையிலும் அக்கறை செலுத்தியுள்ளமைக்கு சார்பான காரணிகள் தருக.

19) புராதன இலங்கைச் சமூகத்தில் காணப்பட்ட இருவகையான அடிமைகளும் யாவர்?

20) சமூக ஒரங்கிணைப்ப என்றால் என்ன?

21) சமூக ஒருங்கிணைப்புக்கு அரசின் பங்களிப்புகள் யாவை?

22) சாதாரண மக்களுக்கும் உயர் குடி மக்களுக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்துவோர் யாவர்?

23) பண்டைய கால சமூக அமைப்பினுள் முக்கியமாக கருதப்பட்டோர் யாவர்?

24) பண்டைய காலத்தில் சட்டத்தை உருவாக்கி செயற்படுத்தவதற்கு பொறுப்பாக்கப்பட்ட அமைப்புக்களைத் தருக.

25) சூழல் பாதுகாப்பு தொடர்பில் பண்டைய காலத்தில் நடைமுறையிலிருந்த சட்டங்கள் 2 தந்து அதற்கான காரணங்களை தருக.

10 அலகு : 07

7 உலர் வலய புராதன நகரங்களின் வீழ்ச்சியும் தென்மேற்கில் புதிய இராச்சியங்களின் தோற்றமும்

1. A) பொலன்னறுவை இரபசதானியை ஆட்சி செய்த முக்கிய மன்னர்கள் 3வரின் பெயர்களைத் தருக
   B) புராதன நகரங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் 4னைத் தருக

2. A)இலங்கையின் முதலாவது நகரமயமாக்கல் கட்டத்துக்கு உரிய பண்டைய நிருவாக நகரங்கள் மூன்றினைத் தருக?
   B) சமூக சமநிலையின்மை என்றால் என்ன? இது எதற்கு அடிப்படையாக அமைந்தது?

3. 1. ABC என்பவற்றால் குறிப்பிடப்படும் பணிகளுடன் தொடர்பான ஆட்சியாளர்கள் யாவர்?
   A- அநுராதபுரத்தை திட்டமிட்ட நகரமயமாக்கியமை
   B- இராசரட்டையை சோழரிடமிருந்து மீட்டமை
   C- சீகிரியாவை ஆட்சி நிலையமாக தெரிவு செய்தமை

   2. மாயரட்டைக்குரிய 2ம் நகராக்க ஆட்சி நிலையங்கள் 2 தருக?

4. 1. A- பொலன்னறுவை வீழ்ச்சிக்கான உடனடிக்காரணம் யாது?
   B- மகான் எந்த நாட்டவர்
   C- இலங்கையை எப்போது ஆக்கரமித்தான்
   2. பொலன்னறுவை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் 2தருக?

5. 1. A- 2ம் பராக்கிரமபாகுவின் தந்தையின் பெயர் யாது?
   B- எப்போது இவர் ஆட்சிபீடம் ஏறினார்?
   C- இம்மன்னனின் சிறப்புப் பெயர் யாது?

   2. 2ம் பராக்கிரமபாகு மன்னன் எதிர்கொண்ட சவால்கள் 2 தருக?

6.
   1. ABC என்பவற்றால் குறிப்பிடப்படும் ஆட்சியாளர்களைப் பெயரிடுக
   A. அநுராதபுர இராசதானியின் இறுதி மன்னன் யார்?
   B. 3ம் விஜயபாகு மன்னன் தலதாமாளிகை அமைந்த இடம்
   C. யாப்பகூவவை தலைநகராக கொண்டு அட்சி செய்த மன்னன்

2.
   A. கம்பளைக் காலத்தில் சீன நாட்டிலிருந்து வந்த தளபதி யார்?
   B. இவர் மேற்கொண்ட முக்கிய விடயங்கள் 2 தருக

7)
   1. A- ஸ்ரீ ஜயவர்த்தனபுரவில் கோட்டையை அமைத்த மன்னன் யார்?
   B- கோட்டையை இராசதானியாக்கிய மன்னர் யார்?
   c- 6ம் பராக்கிரமபாகுவின் தாயின் பெயர் யாது?

   2. 6ம் பராக்கிரமபாகு ஆற்றிய சேவைகள் 2தருக?

8)
   1. A- இராசரட்டையை நாகரீகத்தின் வீழ்ச்சியின் பின்னர் இலங்கையின் வடபகுதியில் தோன்றிய இராச்சியம் எது?

B- செகராச சேகர எனும் நூலில் கூறப்படும் இராச்சியம் எது?

C- யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன் யார்?

2. A- இலங்கையின் வடமத்திய, கிழக்கு, வடமேல் மாகாணங்களில் சனத்தொகை குறைவான பிரதேசங்களில் தோனிறிய ஆட்சியலகு எவ்வாறு அழைக்கப்பட்டது?

B- இவற்றின் ஆட்சித் தலைவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

9) 1.

A- ஈரவலயக்காடுகளில் இயற்கையாக வளர்ந்த வர்த்தகப் பயிர் எது?

B- இபின்பதூதா எப்போது இலங்கை வந்தார்?

C- இலங்கை பீங்கான் பொருட்களை எந்த நாட்டிலிருந்து இறக்கமதி செய்தது?

2. A- இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் இரண்டும் வர்த்தகத் தொடர்புகளை கொண்டிருந்த நாடுகள் இரண்டு தருக?

10)

1. பின்வரும் நூல்களை எழுதியவர்களை பெயரிடுக?

A- பூஜாவலிய-

B- சத்தர்மரத்னாவலிய

C- கவிசிலுமின-

2. தம்பதெனிய கதிகாவத்த, கந்தவுறுசிரித்த என்ற நூல்களில் குறிப்பிடப்படும் விடயங்கள் யாவை?

11) 1. A- சிங்கள இலக்கியத்தின் பொற்காலம்

B- ஆரம்பத்தில் வன்னித் தலைவனாக செயற்பட்டவன்.

C- முன்னேஸ்வரம் கோயில் காணப்படும் இடம்
அடைப்பில் தரப்பட்டவற்றில் இருந்து விடைகளை தெரிவு செய்க
(கம்பளை, கோட்டை, 3ம்விஜயபாகு, 1ம் விஜயபாகு, சிலாபம்)

2. 1ம் புவனேகுபாகு மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் எதிர் கொண்ட தென்னிந்திய படையெடுப்புக்கள் 2தருக

12)

1. பின்வரும் விடயங்களுடன் தொடர்புபடுபவர்களை எழுதுக

A- கலிகால சாகித்ய பண்டித

B- பெப்லியான சுனேத்ரா தேவிபிரிவெனா-

C- பன்சிய பனஸ் ஜாதகய-
(1ம் பராக்கிரமபாகு, 2ம் பராக்கிரமபாகு, 4ம்பராக்கிரமபாகு,6ம் பராக்கிரமபாகு)

2. 6ம் பராக்கிரமபாகு மன்னனின் சேவைகள் 2 தருக?

10 அலகு : 08

8 கண்டி இராச்சியம்

01) கண்டி இராச்சியம் அழைக்கப்பட்ட வேறு பெயர்கள் 3 தருக

02) கண்டி இராச்சியம் ஓர் இயற்கை அரண் எனக் குறிப்பிடுவதற்கு காரணங்கள் 3 தருக.

03) கண்டி இராச்சியத்தின் பாதைகள் 3ஐக் குறிப்பிடுக.

04) முதலாம் இராஜசிங்கன் மலையகத்தை ஆக்கிரமித்த போது அங்கிருந்து தப்பியோடி போர்த்துக்கேயரிடம் தஞ்சம் புகுந்த அரசனையும் அவனது குடும்பத்தையும் குறிப்பிடுக.

05) பின்வருவோர் கத்தோலிக்கராக மாற்றம் பெற்ற போது சூடிக்கொண்ட பெயர்களைக் குறிப்பிடுக.

06) முதலாம் விமலதர்ம சூரியன் புணரமைப்புச் செய்த விகாரைகள் 3 தருக.

07) செனரத் மன்னன் தனது இறுதிக்காலத்தில் மலையகத்தை பிரித்து வழங்கழிய விதத்தை குறிப்பிடுக.

08) பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அமைப்புக்களை அடைப்பிற்குள் இருந்து தெரிந்து எழுதக.
(மடிகே பத்த,படஹெல பத்த,ரதா பத்த,ஹெந்த பத்த)

09) கண்டி இராச்சியாத்தில் வளர்ச்சியுற்றிருந்த கைத்தொழில்கள் 3 தருக.

10) பின்வரும் நில உரிமையை அடிப்படையாகக் கொண்டு அடைப்பினுள் இருந்து விடை தருக.
(கபாடகம்,நிந்தகம்,விகாரகம்,பரவேனிகம்)

நான்கு புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வினாக்கள்

01) முதலாம் விமலதர்ம சூரியன் எதிர் கொண்ட சவால்கள் 2 தருக.

02) முதலாம் விமலதர்ம சூரியன் தனது ஆட்சியினை உறுதிப்படுத்திக்கொள்ள எடுத்த நடவடிக்கைகள் 2 தருக.

03) கண்டி இராச்சியத்தை போர்த்துக்கேய ஆதிக்கத்தில் இருந்து மீட்பதற்கு முதலாம் விமலதர்ம சூரியன் எடுத்த நடவடிக்கைகள் 2 தருக.

04) முதலாம் விமலதர்ம சூரியன் பௌத்த சமயத்திற்கு ஆற்றிய சேவைகள் 2 தருக.

05) இம்மன்னனின் பொருளாதார விருத்திக்கான சேவைகள் 2 தருக.

06) 2ம் இராஜசிங்கன் தனது ஆட்சிக் காலத்தில் எதிர் கொண்ட சவால்கள் 2 தருக.

07) கண்டி அரசின் அதிகாரங்கள் 4 தருக.

08) கண்டி மன்னனால் மட்டுமே தீர்ப்பு வழங்கக் கூடிய வழக்குகள் 4 தருக.

09) கண்டி அரசனால் வழங்கப்பட்ட தண்டனைகள் 4 தருக.
10) கண்டி இராச்சியத்தின் பொருளாதார அமைப்பின் பண்புகள் 2 தருக.

10

அலகு : 09

9

மறுமலர்ச்சி

01. மறுமலர்ச்சி என்பதன் பொருள் என்ன?
02. மறுமலர்ச்சி என்றால் என்ன?
03. மறுமலர்ச்சி தோன்றக் காரணங்கள் 05 தருக
04. கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் துருக்கியர் வசமான ஆண்டு எது?
05. மறுமலர்ச்சிக்கு அனுசரணை வழங்கிய செல்வந்தக் குடும்பங்களைத் தருக
06. மறுமலர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த அச்சு இயந்திரம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
07. மறுமலர்ச்சிக் காலத்தில் கலைகளுக்கு ஆதரவளித்த தருக்த பாப்பரசர்கள் சிலரைத்தருக
08. மறுமலர்ச்சிக்கு ஆதரவு வழங்கிய மன்னர்களைத்
09. "மனிதன் அனைத்தை விடவும் மேலானவன்" எனக் கருதும் வாதம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
10. மறுமலர்ச்சிக் காலத்தில் திருட்சபையினை விமர்சித்தவர்கள் மூவரைக் குறிப்பிடுக
11. மறுமலர்ச்சிக் கால எழுத்தாளர்கள் மூவரைக் குறிப்பிடுக
12. இராஸ்மஸ் திருட்சபை குருமார்களைக் கண்டித்து எழுதிய நூல் எது?
13. "யுற்றோபியா" எனும் நூல் யாரால் எழுதப்பட்டது?
14. பொக்காசியாவின் 100 கதைகள் கொண்ட கதைத் தொகுப்பு எது?
15. மறுமலரச்சிக் கால சித்திரக் கலைஞர்கள் மூவரைக் குறிப்பிடுக
16. "பூரணமனிதன்" என அழைக்கப்பட்ட கலைஞன் யார்?
17. லியனடோ டாவின்சியின் புகழ்பெற்ற ஓவியங்களைத் தருக
18. மைக்கல் ஆஞ்சலோவின் புகழ்பெற்ற ஓவியங்களைக் குறிப்பிடுக
19. மறுமலர்ச்சிக் காலத்தில் புவி தொடர்பாக கருத்துக்களை முன்வைத்த அறிஞர்கள் மூவரைக் குறிப்பிடுக
20. நவீனவானவியல் விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
21. புவிகோள வடிவானது எனவும் ஏனைய கோள்கள் சூரியனை சுற்றி வருவதாகவும் கண்டுபிடித்தவர் யார்?
22. கோள்கள் அனைத்தும் நீள்வட்டப்பாதையில் சூரியனை சுற்றி வருவதாக கூறிய விஞ்ஞானி யார்?
23. தொலைநோக்கியைக் கண்டுபிடித்ததன் மூலம் சந்திரன் பற்றிய தகவல்களை முன்வைத்த அறிஞர் யார்?
24. புவிஈர்ப்பு விசை யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
25. மனித உடலில் குருதி இதயத்தின் வலது பக்கத்திலிருந்து புறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் இதயத்தை வந்து உடல் முழுவதும் பரவிச் செல்கிறது என்பதை கண்டறிந்த விஞ்ஞானி யார்?

26. மறுமலர்ச்சிக்கால கட்டடக்கலை அம்சங்களைத் தருக

27. புவி தொடர்பாக மறுமலர்ச்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்ட மூன்று கருத்துக்களும் எவை?

28. மறுமலர்ச்சிக் கால சித்திரக் கலையின் முக்கிய அம்சங்கள் 03 தருக

29. மறுமலர்ச்சியினால் இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் தோன்றிய பல்கலைக்கழகங்கள் மூன்றினைக் குறிப்பிடுக

30. மறுமலர்ச்சியின் விளைவால் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் இரண்டு தருக

10 அலகு : 10

10 இலங்கையும் மேற்குலகும்

01. இலங்ககக்கும் மேற்குநாடுகளுக்குமிடையில் தொடர்புகள் நிலவியமைக்கான நோக்கங்கள் 2 தருக?

02. ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையே வர்த்தக தொடர்புகளுக்கு உதவிய மூன்று முக்கிய பாதைகளும் எவை?

03. அப் பாதைகள் மூன்றும் பிரதானமாக எந்த நகருடன் தொடர்புபட்டு இருந்தன?

04. துருக்கியாரால் கொன்ஸ்தாந்து நோபிள் கைப்பற்றப்பட்ட ஆண்டு?

05. கொன்ஸ்தாந்து நோபிள் துருக்கியர் வசமானதன் பின்னர் ஐரோப்பியர் வர்த்தக ரீதியாக எதிர் கொண்ட இன்னல்கள் எவை?

06. ஐரோப்பியர் நீண்ட காலமாக பழக்கப்பட்டிருந்த ஆசிய வாசனைப் பொருட்கள் எவை?

07. போர்த்துக்கல் அமைந்துள்ள தீபகற்பத்தின் பெயர் என்ன?

08. போர்த்துக்கல் எச்சமுத்திரத்தை நோக்கி அமைந்துள்ளது?

09. நாடுகாண் பயணத்தில் அதிக ஆர்வம் செலுத்திய போர்த்துக்கல் அரசன் யார்?

10. ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட போர்த்துக்கல் நாடுகாண் பயணங்களில் ஈடுபடக்காரணங்கள் 2 தருக?

11. ஆசியாவின் ஐரோப்பியர் ஆதிக்கம் தொடங்கிய முதல் சந்தர்ப்பம்?

12. போர்த்துக்கேயரின் பின் ஆசியாவுக்கு வருகை தந்த வேறு ஐரோப்பியர்கள் யார்?

13. ஐரோப்பியர் ஆசியாவுக்கு வருவதற்கான பிரதான காரணிகள் எவை?

14. கள்ளிக்கோட்டையை வந்தடைந்த வாஸ்கோடகாமா தனது வருகையைப் பற்றி கூறியது என்ன?

15. போர்த்துக்கேயர் இலங்கையை எவ்வாறு அழைத்தனர்?

16. 1505 இல் போர்த்துக்கேய மன்னனால் கிழக்கு நாடுகளின் இராசப் பிரதானியாக தெரிவு செய்யப்பட்வர் யார்?

17. புயல் காற்றினால் தாக்குண்டு எதிர்பாராதவிதமாக இலங்கையை வந்தடைந்த கப்பலில் பயணித்த பிரதான நபர் யார்?

18. போர்த்துக்கேயர் இலங்கையை வந்தடைந்த போது இலங்கையில் இருந்த மூன்று இராச்சியங்ககளயும் தருக?

19. 6ம் விஜயபாகு மன்னன் கொலை செய்யப்பட்ட ஆண்டு?

20. விஜயபாகுவின் 3 மகன்களின் பெயர்களையும்,அவர்கள் சொந்தமாக்கிக் கொண்ட ஆட்சிப் பிரதேசங்ககளயும் தருக?

21. புவனேகபாகு மன்னனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டமைக்கான காரணங்கள் எவை?

22. தர்மபால மன்னன் மக்களின் ஆதரவை இழந்தமைக்கான காரணங்கள் எவை?

23. யாழ்ப்பாண ஆட்சியாளன் சங்கிலி போர்த்துக்கேயருக்கு எதிராக செய்த நடவடிக்கககள் 3 தருக?

24. யாழ்ப்பாண இராச்சியம் தோல்வி அடைந்தமைக்கான காரணிகள் எவை?

25.1594,1602,1630,1638 இவ் ஆண்டுகளில் போர்த்துக்கேயருக்கு எதிராக நடந்த போர்கள் எவை?

26. கண்டி இராச்சியம் பாதுகாப்புடன் தொடர்ந்தும் இருந்தமைக்கான காரணங்கள் எவை?

27. 1638 கண்டி ஒல்லாந்த உடன்படிக்கையின் 3 விடயங்கள் தருக?

28. கண்டி இராச்சியம் ,ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட போர்த்துக்கேயரின் கோட்டைகள் எவை?

29. கண்டி இராச்சியம் தொடர்பாக ஒல்லாந்தரின் குறிக்கோள்கள் 3 தருக?

30. 1765 இல் நகரை சூரையாடிய போதிலும் ஒல்லாந்தர் கண்டியை கைப்பற்றாமல் திரும்ப கொழும்பு சென்றமைக்கான காரணங்கள் எவை?

தரம் -11

11 அலகு : 01

01 கைத்தொழிற் புரட்சி

01. கைத்தொழில் புரட்சி முதன் முதலாக ஏற்பட்ட நாடு?

02. கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட காலப் பகுதி?

03. கைததொழில் புரட்சி ஐரோப்பாவில் ஏற்பட்டமைக்கான பிரதான காரணம்?

04. இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட துறைகள்?

05. இங்கிலாந்தைத் தொடர்ந்து கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட ஐரோப்பிய நாடுகள் 2 தருக?

06. 1733ஆம் ஆண்டில் பறக்கும் நூனாழி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

07. 1764ஆம் ஆண்டு நூல் நூற்கும் இயந்திரம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

08. நூல் நூற்கும் மியூல் இயந்திரத்தை சாமுவெல் கொம்ப்டன் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடித்தார்?

09. ஆபிரகாம் டர்பி என்பவரால் நிலக்கரி மூலம் இரும்புத்தாதை உருக்கும் முறை எத்தனையாம்

ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?

10. பிரித்தானியாவில் நிலக்கரிப் படிவுகள் அதிகமாக காணப்படும் இரு இடங்கள் எவை?

11. 812ஆம் ஆண்டு ஹம்பிரி டேவி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனம் எது?

12. 1811ஆம் ஆண்டு ஜோன் மெக்கடம் என்பவரால் கண்டறியப்பட்ட பெருந்தெருக்கள் அமைக்கும் முறை எவ்வாறு அழைக்கப்பட்டது?

13. நீராவியால் இயங்கும் புகையிரத என்ஜினைக் கண்டுபிடித்தவர் யார்?

14. புகைப்படகைக் கண்டுபிடித்தவர் யார்?

15. மோட்டார் வண்டியைக் கண்டுபிடித்தவர் யார்?

16. ஆகாய விமானம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

17. பேனி தபால் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?

18. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?

19. தந்தி முறை யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

20. தோலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர் யார்?

21. ஏர் பூட்டப்பட்ட குதிரைகள் மூலம் வரிசையாக பயிரிடும் முறை யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?

22. ரொபட் பெக் வெல் என்பவரால் முன்வைக்கப்பட்ட கண்டு பிடிப்பு எது?

23. கைத்தொழில் துறையில் வளர்ச்சி கண்ட ஒரே ஆசிய நாடு எது?

24. ஆளுனர் பிரட்ரிக் நோர்த்தினால் கோப்பி விதைகளை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

25. ஆளுனர் எட்வட் பாண்ஸின் காலத்தில் அமைக்கப்பட்ட பெருந்தெருக்களில் ஒன்றைக் குறிப்பிடுக?

26. கண்டி – கொழும்பு புகையிரதப் பாதை அமைக்கப்பட்டகாலப் பகுதி யாது?

27. இலங்கையில் குதிரை வண்டிகள் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

28. இலங்கையில் முதன் முதலாக தபால் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு எது?

29. 1903 ஆம் ஆண்டளவில் இலங்கையில் காணப்பட்ட தபால் நிலையங்களின் எண்ணிக்கை யாது?

30. இலங்கையில் தந்தி மூலம் செய்தி பரிமாற்றம் இடம் பெற்ற ஆண்டு எது?

11 அலகு : 02

02 இலங்கையில் பிரித்தானியர் அதிகாரத்தை நிலைநாட்டல்

1. இலங்கையைக் கைப்பறறி ஆட்சி செய்த வெளிநாட்டவர்களையும் அவர்களின் கீழைத்தேய வர்தத்க மத்திய நிலையங்களையும் பெயரிடுக?

2. ஆங்கில கிழக்கிந்திய வர்தத்க கம்பெனி நிறுவபப்ட்ட ஆண்டு ?

3. பிரித்தானியரால் இந்தியாவில் அமைக்கப்பட்ட வர்தத்க நிலையங்கள் எவை?

4. பிரான்சிய கிழக்கிந்திய வர்தத்கக் கம்பெனி நிறுவப்பட்ட ஆண்டு இடங்கள் எவை?

5. பிரித்தானியர் இந்தியாவிலிருந்த போது அங்கிருந்த வெளிநாட்டவர் ?

6. பிரித்தானியர் ஆசியா மதூ கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள் எவை?

7. பிரித்தானியர் இலங்கை மீது கவனம் செலுத்தியமைக்கான பிரதான இரு காரணங்களும் எவை?

8. கேந்திர நிலைய முக்கியத்துவத்தில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்கள் எவை?

9. திருகோணமலைத் துறைமுகம் பிரித்தானியருக்கு முக்கியத்துவமானதாய் அமைந்ததில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் எவை?

10. வர்தத்க முக்கியத்துவத்தில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்கள் எவை?

11. ஆங்கிலேயரின் கணடி இராச்சியத்துடனான தூதுத் தொடர்புகளுக்கு உதாரணம் தருக?

12. பிரான்ஸியப் புரட்சி எப்போது இடம்பெற்றது?

13. பிரான்ஸியப் புரட்சியின் பின் ஒல்லாந்து ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு உருவாகிய புதிய அரசாங்கம் எப்பெயரால் அழைக்கப்பட்டது?

14. ஒல்லாந்து இளவரசன் ஒரேஜ் வில்லியம (ளுவநவா ர்ழடனநச) பாதுகாப்பிறக்காக எங்கு சென்றார்?

15. கியூ கடிதம் என்றால் என்ன?

16. இலங்கையின் இறுதி ஒல்லாந்த ஆளுனர் யார்?

17. திருகோணமலைத் துறைமுகம் ஆங்கிலேயரால் எப்போது கைப்பறற்ப்பட்டது?

18. பிரித்தானியரால் கைப்பறற்ப்பட்ட ஒல்லாந்தர் வசமிருந்த கோட்டைகளை பெயரிடுக?

19. இலங்கையின் கரையோரம் பிரித்தானியரால் நிர்வகிக்கப்பட்ட விதத்தை விளக்குக?

20. 1796 - 1798 ஆங்கில கிழக்கிந்திய வர்தத்க கம்பெனி ஆட்சி என்றால் என்ன?

21. வர்தத்கக் கம்பெனி ஆட்சியின் கீழ் கரையோரத்தை நிர்வகிக்க நியமிக்கப்பட்ட அதிகாரிகளைப் பெயரிடுக?

22. 1797 கிளர்ச்சிக்கான காரணங்களைப் பட்டியலிடுக?

23. 1797ம் ஆண்டு கிளர்ச்சிக்கான காரணங்களை கண்டறிய இலங்கைக்கு அனுப்பப்பட்ட குழு எது?

24. மியூரன் குழுவின் சிபாரிசுகள் எவை?

25. இரட்டை ஆட்சி என்றால் என்ன?

26. இரட்டை ஆட்சியின் கீழ் பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

27. இரட்டை ஆட்சி தோல்வியடையக் காரணங்கள எவை?

28. 1802 முடிக்குரிய ஆட்சி என்றால் என்ன?

29. ஆளுனர் பிரட்ரிக் நோர்த்தினால முன்வைக்கப்பட்ட சீர்திருதத்ங்கள் எவை?

30. கணடியைக் கைப்பறற் ஆங்கிலேயர் ஆர்வம் காட்டியமைக்கான காரணங்களைப் பட்டியலிடுக?

31. மலையகம் மதீன ஆங்கிலேயரின் முதலாவது படையெடுப்பு எப்போது இடம்பெற்றது? அப் படைக்கு தலைமை தாங்கியவர் யார்?

32. 1803ல் கணடியை ஆக்கிரமித்த பிரித்தானிய ஆளுனர் யார்?

33. 1803 மலையம் மதீன பிரித்தானியரின் படையெடுப்பிறக்கான உடனடிக் காரணங்கள் எவை?

34. 1803 பிரட்றிக் நோத் ஆளுநர் கணடிக்கு எதிராக படையெடுப்பு நடத்திய காலத்தில கண்டியை ஆட்சி செய்த அரசர் யார்?

35. மலையகத்தில உண்மையான ஆட்சியுரிமை பெற வேண்டியவன் யார்?

36. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் இயற் பெயர் என்ன?

37. யாருடைய செயற்பாட்டால் கணணுசாமி மலையக மன்னன் ஆனான்?

38. 1803 படையெடுப்புத் தோல்வியடையக் காரணங்கள எவை?

39. இலங்கையின் 2 வது பிரித்தானிய ஆளுனர் யார்?

40. தோமஸ் மெயிட்லன்ட் ஆல் முன்வைக்கப்பட்ட நிர்வாகத்துறை சார்ந்த சீர்திருதத்ங்கள் எவை?

41. தோமஸ் மெயிட்லன்ட் ஆல் முன்வைக்கப்பட்ட நீதித்துறை சார்ந்த சீர்திருதத்ங்கள் எவை?

42. மலையகம் மதீான ஆங்கிலேயரின் 2வது படையெடுப்பு எப்போது இடம்பெற்றது?
43. பிரித்தானியாவின் 3 வது ஆளுனராக நியமிக்கப்பட்டவர் யார்?

44. யாருடைய தலைமையில் கணடி இராச்சியம் கைப்பறற்ப்பட்டது?

45. தநதிரோபாயங்கள் மூலம் கண்டி இராச்சியத்தைக் கைப்பறற் ஆளுனர் பிரௌன்றிற்க்கு உதவிய சிவில் உத்தியோகஸ்தர் யார்?

46. மலையகத்தைக் கைப்பறற் பொருத்தமான சூழலை உருவாக்க ரொபட் பிரௌன்றிக்கின் உதவியால் ஜோன் டொயிலி மேற் கொண்ட நடவடிக்கைகள் எவை?

47. கி.பி.1815 தேசாதிபதி ரொபட் பிறவுண்றிக் கண்டி இராச்சியத்தை இலகுவாக கைப்பறற் முடிந்தமைக்கான காரணங்கள் எவை? கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

48. 1815 படையெடுப்பதற்கான உடனடிக் காரணம் யாது?

49. 1815 ஆங்கிலேயரின் படையெடுப்பின் போது மலையக மன்னன் பதுங்கியிருந்த இடம் எது?

50. இலங்கை வரலாற்றின் இறுதி மன்னன் யார்?

51. ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் எங்கு கொண்டு செல்லப்பட்டான்?

52. 1815 கண்டி ஒப்பந்தம் என்றால் என்ன?

53. ஆங்கிலேயர் சார்பாக கணடி ஒப்பந்தததில் கையொப்பம் இட்டவர் யார்?

54. மலையக மக்கள் சார்பாக கண்டி ஒப்பந்தததில் கையொப்பம் இட்டவர்கள் யார்?

55. வரலாற்றுக் கண்டி உடன்படிக்கையில் ஒப்பமிடுவதற்கு முன்பாக பிரித்தானிய தேசியக் கொடியை ஏற்றுவதறகு எதிர்ப்புத் தெரிவித்து மீண்டும் சிங்களக் கொடியை ஏற்றிய பௌத்த பிக்கு யார்?

56. கண்டி ஒப்பந்தததின் முக்கிய வாசகங்கள் எவை?

57. கண்டி ஒப்பந்தததில் கைச்சாத்திட்ட மலையகத் தலைவர்கள் யார்?

58. மலைநாட்டு பிரதேச நிர்வாகத்திற்கு ஆளுநரின் வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார்?

59. பிரித்தானியர் ஆட்சிக்கு எதிரான 1வது சுதநதிரப் போராட்டம் எப்போது இடம்பெற்றது?

60. அப் போராட்டம் வேறு எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?

61. முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் எவை?

62. முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான உடனடிக் காரணம் யாது?

63. முதலாவது சுதந்திரப் போராட்டத் தலைவர்களைப் பட்டியலிடுக?

64. "உங்களுடைய ஆயுதங்களால் உங்களைத் தாக்க மாட்டேன்" என்று கூறிய போராட்டத் தலைவர் யார்?

65. முதலாவது சுதந்திரப் போரின் போது சிரச்சேதம் செய்யப்பட்ட மலையக பிரதானிகள் யார்?

66. முதலாவது சுதந்திரப் போராட்டம் பரவிய இடங்கள் எவை?

67. போராட்டத்தைக் கட்டுப்படுத்த பிரித்தானியர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?

68. போராட்டம் தோல்வியடையக் காரணங்கள் எவை?

69. பிரித்தானியர் ஆட்சிக்கு எதிரான 2வது சுதநதிரப் போராட்டம் எப்போது இடம்பெற்றது?

70. 1848 2வது சுதந்திரப் போராட்டம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது?

71. 1848 இல் பிரித்தானியருக்கு எதிரான போராட்டக் காலத்தில் இந்நாட்டில் இருந்த பிரித்தானிய ஆளுனர் யார்?

72. 2 வது சுதநதிரப் போருக்கான காரணங்கள் எவை?

73. 1848 போராட்டத்திற்கு வழிவகுத்த கோல்புறுக் சரீதிருத்த சிபாரிசுகள் எவை?

74. 2 வது சுதநதிரப் போராட்டத் தலைவர்களைப் பட்டியலிடுக?

75. 2 வது சுதநதிரப் போராட்டம் பரவிய இடங்கள் எவை?

76. 2 வது சுதநதிரப் போராட்டத்தின் மத்திய நிலையமாக விளங்கியது எது?

77. 2 வது சுதநதிரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

78. 2 வது சுதநதிரப் போராட்டத்தின் விளைவுகள் எவை?